மனிதநேய அமைப்புக்களுக்கான கூட்டமைப்புகூட்டமைப்பு

ஜனவரி 2008

CONSORTIUM OF CHA HUMANITARIAN AGENCIES

# சூழ்நிலையின் துரித மதிப்பிடல்

**(Rapid Context Assessment )**

### தேசிய மட்டத்திலான பகுப்பாய்வு


| | |
|---|---|
| பொருளாதாரச் சூழல் | 2 |
| மனித உரிமைகள் | 2 |
| சுற்றுச்சூழல் | 2 |
| சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கான இடம் | 3 |
| மனிதநேய மற்றும் அபிவிருத்திகளுக்கான இடைவெளி | 3 |


### மாவட்ட பகுப்பாய்வுகள்


| | |
|---|---|
| அம்பாறை | 4 |
| மட்டக்களப்பு | 4 |
| கொழும்பு | 5 |
| யாழ்ப்பாணம் | 5 |
| மன்னார் | 5 |
| திருகோணமலை | 6 |
| வவுனியா | 7 |


### தற்காலப் போக்குகளின் பகுப்பாய்வுச் சட்டகம்

| | |
|---|---|
| பொருளாதாரச் சூழல் | ↘ |
| மனித உரிமைகள் | ↘ |
| சுற்றுச்சூழல் | ↗ |
| சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கான இடம் | ↘ |
| மனிதநேய மற்றும் அபிவிருத்திகளுக்கான இடைவெளி | ↘ |

### சுட்டிகளின் அடையாளம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாற்றமில்லை | → | சிறிது மேம்பட்டுள்ளது | ↗ | சிறிது சீர்கெட்டுள்ளது | ↘ |
| கணிசமானளவு மேம்பட்டுள்ளது | ↑ | கணிசமானளவு சீர்கெட்டுள்ளது | ↓ | | |

# முக்கியமான சாராம்சம்



ஜனவரி 24ம் திகதியுடன முடிவடையும் நான்கு வார காலப்பகுதியில், போரின் நேரடிப் பாதிப்புக்களால் காயமடைந்தவர்கள் மற்றும் இறந்தவர்களின் தொகை இதற்கு முந்தைய மாதத்துடன ஒப்பிடுகையில் மிகவும் அதிகரித்துக் காணப்படுவதை ஊடகங்களிலிருந்து பெறப்படும் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன. எவ்வாறாயினும், "தடுத்து வைத்தல்", மற்றும் "கைது" என்பவற்றின் எண்ணிக்கையில் கணிசமான வீழ்ச்சியும் காணப்படுகிறது.

துரித சூழ்நிலைப் பகுப்பாய்வின் இந்த வெளியீட்டில் எதிர்கால மாதாந்த மீளாய்வுகளுக்கான ஒரு சூழ்நிலையாக நிலைநிறுத்துவதற்கு இலங்கைப் பொருளாதாரத்தின் மீதானதோர் பரந்த கண்ணோட்டம் பயன்படுத்தப்பட்டது. போர் இல்லாத நிலையில் கடந்த இருபத்தைந்து வருடங்களில் சந்தேகத்திற்கிடமின்றி பொருளாதாரம் மேலும் சிறப்பாகச் செயற்பட்டிருக்கக்கூடும் என்கின்ற நிலையில், பொருளாதாரத்தின் ஒரு பகுதி போருக்காக செலவிடப்படுகின்ற போர்ச் சூழ்நிலைகளிலும் கூட பொருளாதாரம் குறிப்பிடத்தக்க மீளுந்திறனைக் காட்டியது. எவ்வாறாயினும், இதில் முக்கியமானவை பொருளாதாரத் தாராளமயமாக்கல் மூலம் உருவான கட்டமைப்புக் காரணிகளாகும். பொதுவாக சிறு அளவில் உற்பத்தி செய்யும் விவசாயிகளிலிருந்து பெரும் தனியார் கூட்டு நிறுவனங்கள் வரை சந்தை வாய்ப்புகளுக்கு வாய்ப்பளித்தனர், இது ஆடை மற்றும் ஏனைய இலகு பொருள் உற்பத்தியாளர்களால் வலுவாக ஆதிக்கம் செலுத்தப்பட்டு வந்த தனியார் ஏற்றுமதித் துறையிலும் நன்கு அவதானிக்கப்படக் கூடியதாக இருந்தது.. நன்கொடையாளர் உதவிகளின் உட்பாய்ச்சல், சில வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் விசேடமாக மத்திய கிழக்கிலிருந்தான தொழிலாளர்களின் பண உள்ளனுப்புதல்கள் என்பன பொருளாதாரத்திற்கு உதவின. எவ்வாறாயினும், போர்ச் செலவினங்களுக்கான அண்மைக்கால அதிகரிப்பு மற்றும் பணவீக்கத்தின் உயர்ந்த வீதம் என்பன இந்த "போர்-ஏற்றுமதி" ஆல் வழி நடத்தப்படும் அபிவிருத்தி மாதிரியை வலுவிழக்கச் செய்யும் அச்சுறுத்தலைத் தருகின்றன.

போரைப் பொறுத்தவரையில், இனப் பிரச்சினைக்கு அரசாங்கம் இராணுவத் தீர்வொன்றையே நாடுவது பரவலாக அறியப்பட்டுள்ளதென்பதுடன் இந்தக் கொள்கையை கண்டிக்கும் விமர்சனங்கள் எதுவும் பயங்கரவாதத்திற்கு துணை போவதாக அர்த்தம் கற்பிக்கப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில், எந்தக் காரணத்திற்காகவும் போருக்கு ஆதரவளிக்காத சிவில் சமூக நடவடிக்கைகளை விட போருக்கு ஆதரவான நடவடிக்கை முன்னெடுப்புகளுக்குக் கூடுதல் முக்கியத்துவம் வழங்கப்படுவதுடன் ஊடகங்களின் சில பிரிவினர் போருக்கு எதிரான கருத்துக்களுக்கு சுய தணிக்கையை நடைமுறைப்படுத்த வைத்துள்ளது. பாராளுமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சி கூட இதற்கு பயனுறுதிமிக்க வகையில் எதிர்க்குரல் எழுப்பத் தவறிவிட்டது.

போர் வலயங்களில், குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மனிதநேய வழிமுறைகளுக்கான இடைவெளியை இது மேலும் ஒடுக்கியது. தேசிய மற்றும் மாவட்ட மட்டங்களில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பி நிலைமைகளைச் சீராக்கவும் மற்றும் மனிதநேய உதவிகளுக்காகவும் (CBSM) இராணுவத் தொடர்பு அதிகாரிகள் நியமிக்கப் பட்டனர். கிழக்கு மாகாணத்திலிருந்து 1000 தமிழ் பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்களை புதிதாக பணிக்குச் சேர்க்கும் இலக்கோடு 50 பெண்கள் உட்பட இரு நூறு பேர் பொலிஸ் உத்தியோகத்தர்களாக பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

புத்தாண்டு தினத்தன்று எதிர்க்கட்சி தமிழ் பாராளுமன்ற உறுப்பினரின் படுகொலை புதிய வருடத்தில் மனித உரிமைகள் மற்றும் நாட்டின் சட்டங்களுக்க ஒரு அமங்கலமான செய்தியைக் கட்டியம் கூறியது என்பதுடன் அதேபோன்ற வன்முறைச் சம்பவங்கள் கடந்த மாதத்தின் செய்திகளில் ஆதிக்கம் செலுத்தியது. யுத்தநிறுத்த உடன்படிக்கையை இரத்துச் செய்தமை மனிதநேய முகவர்களிடையே கரிசனத்தை எழுப்பியது. அரசாங்கம் உரத்துக் குரலெழுப்பி மறுதலிக்கின்ற போதிலும் 2007 இன் முடிவில் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தினால் குறிப்பிடப்பட்ட 188,000 உள்ளக இடம்பெயர்ந்த மக்களின் நிலை தொடர்கின்ற நேரத்தில்

போர் வலயங்களில், குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மனிதநேய வழிமுறைகளுக்கான இடைவெளியை இது மேலும் ஒடுக்கியது. தேசிய மற்றும் மாவட்ட மட்டங்களில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பி நிலைமைகளைச் சீராக்கவும் மற்றும் மனிதநேய உதவிகளுக்காகவும் (CBSM) இராணுவத் தொடர்பு அதிகாரிகள் நியமிக்கப் பட்டனர். கிழக்கு மாகாணத்திலிருந்து 1000 தமிழ் பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்களை புதிதாக பணிக்குச் சேர்க்கும் இலக்கோடு 50 பெண்கள் உட்பட இரு நூறு பேர் பொலிஸ் உத்தியோகத்தர்களாக பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

# தேசிய மட்டத்திலான பகுப்பாய்வு

## பொருளாதாரச் சூழ்நிலை

***யுத்த நிலைமைகளின் கீழ் வளர்ச்சி***

கடந்த இருபத்தைந்து வருடங்களில் இலங்கையின் பொருளாதாரம், நீடித்துச் செல்லும் உள்ளூர் யுத்தத்திற்கிடையிலும் குறிப்பிடத்தக்களவிற்கு மீள்திறன் கொண்டதாகவுள்ளது. 1983 மற்றும் 2006 என்பவற்றுக்கிடையிலான 26 வருடங்களில் 13 வருடங்களிற்கு வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி 5% அல்லது அதற்கு மேலானதாக காணப்பட்டதுடன் இதில் ஆறு வருடங்களுக்கு 4% விட குறையாமல் இருந்ததுடன் 2001 ஆம் ஆண்டில் மட்டும் எதிர்மறை வளர்ச்சி வீதத்தைக் கொண்டிருந்தது. போரில்லாத சூழ்நிலையில் பொருளாதாரம் சந்தேகமின்றி ஒரு ஆரோக்கியமான செயற்பாடுகளை பதிவு செய்திருக்கும்.

எவ்வாறாயினும் பொருளாதாரத்தின் மீள்திறனிற்கான காரணத்தின் ஒரு பகுதியாக முரண்பட்ட வகையில் யுத்தத்தின் இராணுவச் செலவுகளே அமைந்துள்ளன. நாட்டின் அரசியல் நிலைமைகள் மற்றும் போர் நிலைமைகள் என்பவற்றுக்கிடையிலும் 1970 களின் பிற்பகுதிகளில் ஏற்பட்ட பொருளாதார தாராளமயமாக்கலுடன் தனியார் துறையே நாட்டின் முதலீடு மற்றும் உற்பத்திகளை சில மட்டத்தில் வெற்றிகரமாகப் பேணின. 1983 மற்றும் 2006 இற்கிடையிலான காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு பங்காக முதலீடு 21% விட ஒருபோதும் வீழ்ச்சி அடையாததுடன் இதில் 10 வருடங்களுக்கு 25% ஐயும் தாண்டியது. வெளிநாட்டு உதவிகளின் உறுதியான பாய்ச்சல் மற்றும் சில வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவரும் பொருளாதாரத்தின் தன்மை என்பன இந்த இலக்கங்களை உயர்வாக பேணுவதற்கு உதவின. இத்துடன் இணைந்ததாக 2000 ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதிகளில் 2000 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டிய, வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்கள் உள்நாட்டுக்கு அனுப்பிய பெருமளவிலான பணமும் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த உதவின. கடந்த முப்பது வருடங்களாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 25% இலிருந்து 30% இற்கு இடையிலான பங்கைப் பிரதிபலிக்கும் ஏற்றுமதிகளும் மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான வெளியதிர்ச்சிகளை குறைத்தன.

எவ்வாறாயினும், யுத்த செலவுகள், நுகர்வுத் திறனை தீவிரமாக ஒடுக்கும் பொழுதும் மற்றும் வர்த்தக சூழ்நிலைகள், முதலீடுகள் வீழ்ச்சியடையும் நிலையால் சீர்கெடும் பொழுதும் நிலைமைகள் மோசமான நிலைமைகளுக்கு மாற்றமடையும் என்பதுடன் பொருளாதாரமும் கடும் வீழ்ச்சியடையும். வரவுசெலவுத் திட்டத்தின் பாரிய துண்டு விழும் தொகை மற்றும் பெரும் செலவிலான வெளிநாட்டுக் கடன்கள் என்பன பலவீனமான பொருளாதாரத்திற்கு இட்டுச் செல்லும். ஏற்கனவே வருடாந்த பணவீக்கம் 20% இற்கும் அதிகமாக காணப்படுகின்றது. பலவீனமானதோர் உலகப் பொருளாதாரம் எமது ஏற்றுமதிக்க உதவமாட்டாது. ஆசியாவில் இலங்கை மட்டுமே ஐரோப்பிய சந்தையில் ஏற்றுமதிகளை சலுகையடிப்படையில் அணுகுவதற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் "பொது முன்னுரிமை விருப்ப நேர் பெறுமதி (GSP+)" எனப்படும் வர்த்தக சலுகை மூலம் நன்மை பெறும் நாடாகவுள்ளது. 2005 இல் "நிலையான அபிவிருத்தி மற்றும் நல்லாட்சி" என்பவற்றுக்காக வழங்கப்பட்ட இந்தச் சலுகை இந்த வருடத்தின் பிற்பகுதியில் மீள்புதுப்பிக்கப்பட உள்ளது என்பதுடன் அதற்கு எந்த உத்தரவாதமுமில்லை என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளப்படவேண்டியதொன்றாக உள்ளது. இவ்விதமாக அனைத்து பொருளாதார அறிகுறிகளும் சாதகமானவையாக காணப்படவில்லை.

## மனித உரிமைகள்

| | | 24 நவம்பர் 2007 - 23 டிசம்பர் 2007 | 24 டிசம்பர் 2007 - 23 ஜனவரி 2008 |
|---|---|---|---|
| மீறல் | பாதிப்படைந்தவர் | மொத்தம் | மொத்தம் |
| கடத்தல் | பொதுமக்கள் | 08 | 04 |
| கைது | பொதுமக்கள் | 1814 | 369 |
| தாக்குதல் | பொதுமக்கள் | 0 | 03 |
| தடுத்து வைப்பு | பொதுமக்கள் | 1467 | 346 |
| பலவந்தமான இடப்பெயர்வு | பொதுமக்கள் | 0 | 16 |
| காயமுற்றோர் | இராணுவம் | 194 | 377 |
| | பொதுமக்கள் | 94 | 157 |
| | தமிழீழ விடுதலைப் புலிகள் | 232 | 335 |
| கொலை செய்யப்படல் | இராணுவம் | 54 | 105 |
| | பொதுமக்கள் | 98 | 84 |
| | தமிழீழ விடுதலைப் புலிகள் | 656 | 874 |

மேற்கூறப்பட்ட புள்ளிவிபரங்கள் தெரிவு செய்யப்பட்ட செய்திப் பத்திரிகைகள் மற்றும் இணையத் தளங்களிலிருந்து குறிப்பிட்ட சில வன்முறைகள் தொடர்பாக பெறப்பட்டு டிசம்பர் 2007 மற்றும் ஜனவரி 2008 ஆகிய மாதங்களுக்கிடையில் ஒப்பிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட புள்ளி விபரங்களை முழுமையாக அவதானிக்கையில் கடந்த இரு மாதங்களிலும் கொலை செய்யப்படல், காயமுறல், பலவந்தமான இடப்பெயர்வு மற்றும் தாக்குதல்கள் என்பவற்றின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன. கடத்தல்கள், கைதுகள் மற்றும் தடுத்து வைப்பு தொடர்பாக கடந்த மாதத்தில் அறிவிக்கப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை மேலே குறிப்பிடப்பட்டது போன்று முன்னைய மாதத்தை விட குறைந்துள்ளது. ***விபரமான தகவல்களுக்கு தயவுசெய்து hrac@cha.lk யை தொடர்பு கொள்ளவும்.***

## சுற்றுச்சூழல்

சுற்றுச்சூழலின் நிலையான தன்மை, காலநிலை மாற்றங்கள் மற்றும் புவி வெப்பமடைதல் என்பவற்றின் முக்கியத்துவங்களை அங்கீகரிக்கின்ற உலகத்தின் போக்கோடு இலங்கை கூடுதலாக இணங்கிச் செல்வதனால் சுற்றுச்சூழல் துறையின் பொதுவான போக்கு சாதகமானதாக காணப்படுகிறது. இதன் பயனாக அபிவிருத்தித் துறையில் சுற்றுச்சூழலின் நிலையான தன்மை நோக்கிய செயல் திட்டங்கள் அதிகரிக்கிறது. எவ்வாறாயினும், சில வாழ்வாதார மற்றும் அபிவிருத்திச் செயல் திட்டங்கள் என்பன தங்களது குறிக்கோள்களை கிடைக்கின்ற வளங்களுக்கும் அப்பால் அளவிடுவதால் சுற்றுச்சூழலில் சாத்தியமான நீண்டகால பாதிப்பை ஏற்படுத்துகின்றன (உதாரணம்: வீட்டுத் தோட்டங்கள் வர்த்தக நோக்கங்களுக்கான முயற்சிகள் ஆக்கப்படல்; குடிசைக் கைத்தொழில்கள் நடுத்தர கைத்தொழில்களாக்கப்படல்; பாரம்பரிய மீன்பிடி வள்ளங்கள் வர்த்தகப் படகுகளாக மாற்றப்படல்; போதுமான உட்கட்டுமான வசதிகளின்றிய பெருமளவிலான மீள்குடியேற்றத் திட்டங்கள்). பல மீள்சுழற்சிச் செயல் திட்டங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் வருமானம் ஈட்டலும் இணைந்ததோர் முறையாக மாவட்டங்கள் தோறும் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மீள்சுழற்சிக்குப் பொலித்தீன் மிகவும் இலாபகரமான பொருளாக உள்ளது; எவ்வாறாயினும் கண்ணாடி, உலோகங்கள் மற்றும் காட்போட் என்பனவும் சேகரிக்கப்படுகின்றன. இலங்கையில் ஆதரவையும், அங்கீகாரத்தையும் பெறும் ஏனைய சூழலியல் நிலையான செயல் திட்டங்கள் சேதன வேளாண்மை, வீட்டுத்தோட்ட அபிவிருத்தி மற்றும் விரிவாக்கல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. மறுபுறத்தே,

தெற்காசியாவிலேயே விவசாய இரசாயனங்களை தனிநபர் ரீதியில் அதிகளவில் பயன்படுத்தும் நாடாக இலங்கையுள்ளது. (IUCN சிவப்புப் பட்டியல் அறிக்கை). மேலும் ஒட்டுதல் முறையிலான பயிர்களின் கூடுதல் பயன்பாட்டை முன்னேற்றுதல் மற்றும் பாவனை என்பன விவசாயத்தில் மரபுருக்களின் பல்லினத்தன்மை பொதுவாக இழக்கப்படுவதற்கான அபாயங்களைக் கொண்டுள்ளன.

எதிர்காலத்தில் உடனடியாக முகம் கொடுக்கவிருக்கும் சவால்களாக புவி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றங்கள் என்பன இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இச்சவால்களை எதிர்கொள்ள இதன் தாக்கங்களைத் தணித்தல் மற்றும் அநுசரித்தல் ஆகிய இருவகை உத்திகளும் வடிவமைக்கப்பட்டு, அமுல்படுத்தப்படுகின்றன. இலங்கை காபன் வர்த்தக அணியுடன் விரைவாக இணைந்து கொண்டதுடன், மேலதிக காபன் வள நாடுகளுடன் ஒப்பந்தங்களை உறுதிப்படுத்தி, அந்நியச் செலாவணி ஈட்டும் ஒரு முயற்சியாக தற்போதுள்ள வன வளங்களைப் பாதுகாக்கவும் மற்றும் காடழிந்த நிலங்களில் மீண்டும் மரநடுகைக்கான அதன் எண்ணத்தையும் வெளிப்படுத்தியது. இலங்கையின் வனப்பிரதேசங்களைப் பேணுவது மற்றும் மீள்புதுப்பிக்கக் கூடிய சக்திக்கான தோற்றுவாயில் முதலீடு செய்வது போன்றவற்றில் பொதிந்துள்ள நலன்களிற்காக கொள்கையளவில் இதுவோர் சாதகமான நகர்வாகக் காணப்பட்டாலும், இந்த முயற்சி பரந்தளவிலான காட்டு நிலங்கள் வர்த்தக முயற்சிகள், அரசியல் ரீதியிலான நில ஆக்கிரமிப்புக்கள், பெரும் அணைகளுக்கான திட்டங்கள் மற்றும் பொதுவான நில அத்துமீறல்கள் போன்ற யதார்த்தங்களினால் முரண்படும் நிலைக்குள்ளாகின்றது. வன்னிப் பிரதேசத்தில் அரசாங்கத்தின் குண்டு வீச்சு செயற்பாடுகளினால் பெருமளவில் காடுகள் அழிக்கப்படுவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர்.

2004 இன் சுனாமி, இலங்கைக் கடற்கரைகளில் பல தசாப்பதங்களாக நடைபெற்ற வளங்களின் சுரண்டல்களை வெளிப்படுத்தியது. கண்டல் தாவரங்கள் மற்றும் கடற்கரை முகப்புத் தாவர வளர்ப்பு போன்றவை மீது கவனம் செலுத்தும் கரையோரப் புனருத்தாரணம் பரவலாக நடைமுறைப் படுத்தப்பட்டாலும் சட்டவிரோதமாக முருகைக்கல் அகழ்தல் மற்றும் மண் அகழ்தல் என்பன தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் என்பனவும் வெவ்வேறு பிரதேசங்களில் நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

யால மற்றும் உடவளவப் பகுதிகளிலான அண்மைக்கால செயற்பாடுகள் சுற்றுச்சூழலிற்கான அச்சுறுத்தல்களாகக் காணப்படுகின்றன. இவ்விதமான ஸ்திரமற்ற நிலைமைகள் மற்றைய சமயங்களில் பாதுகாக்கப்படும் இப்பகுதிகளில் திருட்டுத்தனமாக வேட்டையாடுவோர், புதையல் தோண்டுவோர் மற்றும் மரக் கடத்தல்களில் ஈடுபடும் கூட்டம் போன்றோருக்கு தங்கள் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவதற்கான ஏதுநிலையை அளிக்கின்றது. சுற்றிவரவுள்ள கிராமங்களுக்கு துப்பாக்கிகளை வழங்குவதும் மனிதன் மற்றும் வனஜீவராசிகளுக்குமிடையிலான மோதல்களுக்கும், அத்துமீறி வேட்டையாடுதலுக்குமான சாத்தியங்களை அதிகரிக்கலாம். தமிழீழ விடுதலைப் புலிகள் பாதுகாக்கப்பட்ட வன ஜீவராசிகளை இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு ஏற்றுமதி வியாபாரம் செய்வதாக உறுதிப்படுத்தப்படாத வதந்திகள் ஏற்கனவே உலாவுகின்றன.

## சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கான இடைவெளி

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் இராணுவத் தீர்வை நாடுவதிலேயே உறுதியாகவுள்ளது என்பது மக்களின் பரவலான நம்பிக்கை. சிங்களப் பெரும்பான்மைச் சமூகத்தில் 50% இது சாத்தியமானதென நினைக்கையில், சிறுபான்மைச் சமூகத்தில் பெரும்பாலானோர் இந்தக் கருத்திற்கு ஆதரவளிக்கவில்லை. போரைப் பொறுத்தவரையில், பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் பெரும்பான்மையை உறுதி செய்ய வேண்டியதொரு தேவைப்பாட்டின் நிமித்தமே போர் முன்னெடுக்கப்படுகின்றதென்பது அரசாங்கத்தின் கொள்கையாகக் காணப்படுகிறது.

தன்னைப் பற்றிய விமர்சனங்கள் மற்றும் குறைகளை பயங்கரவாதத்திற்கானதோர் ஆதரவு நடவடிக்கையாகக் கருதும் ஓர் அரசாங்கத்தின் கீழ், யுத்தநிறுத்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டதிலிருந்து சிவில் சமூகங்களின் முன்னெடுப்புக்கள் அமைதியாக்கப்பட்டுள்ள இவ்வேளையில் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்தல் மற்றும் ஐ. நா முகவர்களது செயற்பாடுகளை கட்டுப்படுத்தல் போன்ற கோரிக்கைகளை உள்ளடக்கும் ‘தேசிய நலனில் அக்கறை கொண்ட அமைப்பு’ (Jathiya Surakeeme Viyaparaya) என அறியப்படும் சிவில் சமூக ஸ்தாபனமொன்றின் முன்னெடுப்புக்களே பெருங்குரலில் முன்வைக்கப்படுகின்றன.

ஊடகங்களில் சில, அரசாங்கத்தின் கொள்கைகளை நேரடியாக விமர்சிப்பதைத் தவிர்க்கும் வகையில் தாமாகவே நடைமுறைப்படுத்தும் வகையிலான ஒரு மாதிரியினுள் செயற்படுவதுடன் அரசசார்பற்ற ஸ்தாபனங்களின் செயற்பாடுகளைப் பொதுவாக கீழ்நிலைப்படுத்தும் ஒரு போக்கையே காட்டியுள்ளன.

பாராளுமன்றத்தின் ஒரு வினைத்திறனற்ற எதிர் தரப்பினர், சர்வதேச அரங்கில் நாடு தனிமைப் படுத்தப்படல் எனும் விடயத்தை தேசிய உணர்வில் பற்றுக் கொண்ட மக்களிற்குத் திரும்பத் திரும்பக் கூறியும் அது எந்தச் சந்தர்ப்பத்திலும் பொரிதாக ஏற்றுக்கொள்ளப்படாமையானது அரசாங்கத்திற்கு அதிகரித்துச் செல்லும் பணவீக்கத்தினால் உருவான பொதுவான அதிருப்தி நிலையை சமாளித்து வெற்றி கொள்ள ஏதுவாகியது.

## மனிதநேய மற்றும் அபிவிருத்திக்கான இடைவெளி

ஜனவரி 1ஆம் நாளிலேயே புதுவருடம் ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனின் படுகொலையுடன் விடிந்தது. அரசாங்கம் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்யும் அதன் எண்ணத்தை அறிவித்தது. உதவி நிறுவனங்கள் ஆரம்பத்தில் இந்த நிலைமையின் அபிவிருத்தி, அதிகரித்துச் செல்லும் போரினால் நிச்சயமாகப் பாதிக்கப்படும் மக்கள் தொகையின் ஒரு பகுதிக்கான அவர்களது மனிதநேயப் பணிகளை வழங்கும் வழிமுறைகளைப் பாதிக்குமா என கரிசனம் கொண்டிருந்தனர். அரசாங்கம் உடனேயே மனிதநேய அணுகுமுறைகள் யுத்தநிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வருவதற்கு முன்பே இருந்ததாக சுட்டிக் காட்டியது. எவ்வாறாயினும் உதவி நிறுவன முகவர்கள், உதவிகள் தேவைப்படும் பகுதிகளுக்கான அவர்களது அணுகுதல்களுக்கான வழிமுறைகள் கட்டுப்படுத்தப்பட அல்லது முற்றிலுமாகத் தடைப்படும் சந்தர்ப்பங்களுக்காக மாற்றுத் திட்டங்களை நன்கு திட்டமிட்டு உருவாக்குதல் வேண்டும்.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்ட அண்மைக்கால புள்ளிவிபரங்கள், 2006 ஏப்பிரலிற்கு பின்னர் மட்டும் உள்ளக இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை டிசம்பர் 31, 2007 தினத்தன்று 187, 850 ஆக இருந்தது எனத் தெரிவிக்கின்றன. இந்த எண்ணிக்கை, கடந்த வருடம் மட்டக்களப்பின் பல்வேறு பகுதிகளில் மீள்குடியமர்த்தப்பட்ட உள்ளக இடம்பெயர்ந்த மக்களை விடத் தனியாக இருந்ததுடன் 2006 ஏப்பிரலிற்கு முன்னர் மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த ‘பழைய’ உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் அல்லது சுனாமியால் இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தொடர்ந்தும் அல்லலுறும் மக்கள் தொகையையும் கணக்கில் கொள்ளவில்லை. கிழக்கில் ஏற்பட்ட திடீர் வெள்ள நிலைமைகள் செய்கை பண்ணப்பட்ட பயிர்களின் அறுவடைகளைப் பாதித்ததுடன் தொடர்ந்தும் உதவிகளில் தங்கியிருக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியது. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களிலிருந்து வழங்கல்கள் மற்றும் பொருட்கள் கொள்ளை யடிக்கப்பட்ட சம்பவங்களும் அண்மைக் காலத்தில் நடைபெற்றுள்ளன. கொள்ளையடிக்கப்பட்ட கட்டிடப் பொருட்களை நன்கொடை முகவர்கள் மீள்வழங்க முடியாத நிலையிலுள்ளதினால் இந்த நிலைமை மீள்குடியேற்ற நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த ஏதுவாகிறது.

உணவுப் பொருட்கள் ஏற்றிய கப்பல்கள்

யாழ்ப்பாணத்திற்குப் போய்வருவதினால் யாழ் குடாநாட்டில் உணவுப் பொருட்களது நிலைமை மேம்பட்டுள்ளது. எவ்வாறாயினும் வாழ்வாதார உதவிகள் தொடர்ந்தும் கரிசனத்திற்குரியவை. வடக்கு மற்றும் கிழக்கில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் மற்றும் நிலைப்படுத்துதல் முயற்சிகள் (CBSM) மீது இராணுவம் மற்றும் சிவில் நிர்வாகத்தினர் திட்டமிடல் கட்டங்களில் சில முன்னேற்றங்களை ஏற்படுத்தியுள்ளனர். தேசிய மற்றும் மாவட்ட மட்டங்களில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் மற்றும் நிலைப்படுத்தல் முயற்சிகள் மற்றும் மனிதநேய உதவிகளுக்காக இராணுவத் தொடர்பு அதிகாரிகளை நியமித்தமையானது சந்தேகத்திற்கிடமின்றி பொதுமக்களின் ஆதரவை வென்றுள்ளது.

# மாவட்ட பகுப்பாய்வுகள் - 2008 ஜனவரி 1 - 28

## அம்பாறை

### கள நிலைமைகள்

கடந்த மாதத்தின் முற்பகுதிகளில் பெய்த கடும் மழை வெள்ள நிலைமையை ஏற்படுத்தி அதன் பயனாக 30,000 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்தன. இந்தப் பகுதியைப் பாதிக்கும் ஏனைய காரணிகளாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சி பாராளுமன்றத்தில் எதிர்த்தரப்புடன் இணைந்து கொண்டமை, அரசாங்கம் கிழக்கு மாகாணத்திற்கான தேர்தல்களை அறிவித்தமை, ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரனின் படுகொலை மற்றும் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் என சந்தேகிக்கப்படுவோரால் மொனராகலை மாவட்டத்தில் பொதுமக்கள் கொல்லப்பட்டமை அதேபோன்ற உள்ளூராட்சி தேர்தல்களில் துப்பாக்கி தூக்கிய பிள்ளையான் குழு உறுப்பினர்களின் கூடுதல் ஈடுபாடுகள் என்பன காணப்பட்டன. கொலைகள், துணை இராணுவக் குழுக்களுக்கிடையிலான மோதல்கள், கடத்தல்கள், கொள்ளை மற்றும் சூறையாடல்கள் என்பவை உள்ளடங்கலான ஒட்டுமொத்த வன்முறைகளின் தன்மைகள் மாற்றமின்றிக் காணப்பட்டன. ஆரையம்பதியில் இந்துக் கோவிலொன்றை சேதப்படுத்தியமை, தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் பதட்டத்தை உருவாக்கியது.

### செயற்பாட்டாளர்கள்

கிழக்கு மாகாணத்தில் செயற்படும் அரசியல் கட்சிகள், அரசாங்க பாதுகாப்புப் படைகள், பொலிஸ், தமிழீழ விடுதலைப் புலிகள், ஜிகாத் இயக்கம் மற்றும் பிள்ளையான் குழு போன்றவை பிரதான செயற்பாட்டாளர்களாக கருதப்படலாம்.

### மாற்றங்கள்

அண்மைய வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களை மீள்குடியமர்த்தும் விடயம் மற்றும் உள்ளூராட்சி தேர்தல் என்பன மாவட்டத்தை தற்போது பாதிக்கும் மாற்றங்களாகும். சுனாமி மற்றும் மோதல்களினால் இடப்பெயர்வுக்குள்ளாகி தற்காலிக முகாம்களில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அசமந்த செயற்பாடுகளால் தொடர்ந்தும் அல்லலுறும் உள்ளக இடம்பெயர்ந்த மக்கள், அண்மைய வெள்ளத்தால் புதிதாக உள்ளக இடப்பெயர்வுக்குள்ளான மக்களால் மேலும் பல சிரமங்களுக்குள்ளாகினர். மோதல்களை அதிகப்படுத்தும் எந்தவொரு விடயம் பற்றியும் எச்சரிக்கையாக உள்ளனர்; அண்டைய மாவட்டமான மொனராகலையில் நடைபெற்ற கொலைகளினால் பீதி ஏற்பட்டது. இனந்தெரியாத குழுவொன்றால் இந்துக் கோவிலொன்றுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதமும், தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான உறவைக் கடுமையாகப் பாதித்தது. எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களும் மாவட்டத்தின் செயற்பாடுகளைப் பாதித்துள்ளது; விசேடமாக ஆயுதம் தாங்கிய குழுவொன்றால் வேட்பாளர் ஒருவர் அண்மையில் கடத்திச் செல்லப்பட்டமை இதிலொன்றாகும்.

### உபாயங்களும் தெரிவுகளும்

தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் எவ்விதம் சிறந்த முறையில் உறவுகளைப் பேணலாம் என்பது தற்போதுள்ள முக்கியமான உபாயத்திற்கான விடயமாகும். இவ்விரு சமூகங்களுக்குமிடையிலுள்ள பதட்டத்தை உள்ளூராட்சி தேர்தல்கள் அநேகமாக அதிகரிக்கச் செய்யலாம். அரசசார்பற்ற ஸ்தாபனங்கள் மற்றும் அரசியல் கட்சிகள் என்பன இந்த உறவு நிலையைப் பேணுவதற்கு உறுதியான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

## மட்டக்களப்பு

### கள நிலைமைகள்

கிழக்கின் உள்ளூராட்சி தேர்தல்கள் மற்றும் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் புதிதாக உருவாகியுள்ள பதட்ட நிலைகள் என்பன இந்தப் பகுதியின் நிலவரங்களை வரையறுத்துக் காட்டுகின்றன. அரசாங்கம் மார்ச் மாதத்தில் தேர்தல்களை நடாத்துவதற்கு அறிவித்ததிலிருந்து பல்வேறுபட்ட அரசியல் கட்சிகள் மற்றும் ஏனைய ஸ்தாபனங்களிலிருந்தும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டன. ஏற்கனவே தமிழ் மற்றும் முஸ்லிம் இனச் சமூகங்களுக்கிடையில் பதட்டம் மற்றும் கொலைகள் நிறைந்துள்ள ஒரு சூழ்நிலைக்கு தேர்தல்கள் மேலும் வலுச் சேர்க்கலாம் என்ற பொதுவான அச்சமே இந்த எதிர்ப்புக்குப் பிரதான அடிப்படையாக இருந்தது.

வன்முறைகளைத் தடுப்பதற்கு சமயத் தலைவர்கள் மற்றும் ஏனைய ஸ்தாபனங்களால் எடுக்கப்படும் பல்வேறு முயற்சிகளுக்கும் மத்தியிலும் இந்த அச்சம் தொடர்ந்தும் நிலவுகிறது. இவ்வித நிலைமைகளால் மாவட்டத்தின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குட்பட்டே உள்ளது. நான்கு அரசியல் கட்சிகள் சேர்ந்து உறுதியான கூட்டிணைப்பை உருவாக்கியுள்ள போதும், பிள்ளையான் குழுவினர் தமக்கே வாக்களிக்கும்படி மக்களை அச்சுறுத்த ஆரம்பித்துள்ளனர். மோதல்கள், சுனாமி மற்றும் ஜனவரி மாத முற்பகுதியில் ஏற்பட்ட அண்மைய வெள்ள நிலைமைகளால் பாதிக்கப்பட்ட பெருமளவிலான குடும்பங்கள் முறையான இடவசதிகளின்றி தொடர்ந்தும் துன்புறுகின்றனர்.

மாவட்டத்தின் மக்களது பொருளாதார நிலைமையும் உறுதியற்றதாக உள்ளது.

### செயற்பாட்டாளர்கள்

அரசியல்வாதிகள் மற்றும் பிள்ளையான் குழுவினர் ஆகியோர் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் சூழ்நிலைகளில் பிரதான செயற்பாட்டாளர்களாக மாறியுள்ளனர். அரசாங்கப் படைகள் மற்றும் உள்ளூர் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற ஸ்தாபன பணியாளர்களும் முக்கியமான செயற்பாட்டாளர்களாவர்.

### மாற்றங்கள்

யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைவிடப்பட்டதன் பின்னர் அதனைத் தொடரும் தெற்கிலான வன்முறைகள் மற்றும் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்கள் என்பன மாவட்டத்தை தற்போது பாதிக்கும் முக்கியமான மாற்றங்களாகும். ஆரையம்பதியிலுள்ள ஒரு இந்து ஆலயத்திற்குச் சேதம் ஏற்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்து ஏற்பட்ட தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான பதட்டமும் கரிசனத்திற்குரிய ஒரு விடயமாக உள்ளது. சில அரசியல் கட்சிகளின் கூட்டிணைப்பு மற்றும் பிள்ளையான் பிரிவினது நடவடிக்கைகளும் கூட சில கரிசனத்திற்குரியவை ஆகின்றன.

### உபாயங்கள் மற்றும் தெரிவுகள்

தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் உறவுநிலைகளை மீள்கட்டியெழுப்புவதற்கான உடனடி உபாயம் அவசரமாகத் தேவைப்படுகின்றது. அரசாங்கம் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அமைதியானதும், நியாயமானதுமான தேர்தலை உறுதி செய்வதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

# கொழும்பு

### கள நிலைமைகள்

புதுவருடம் தழிழ் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் தேச நிர்மாண அமைச்சர் ஆகியோரது படுகொலைகளுடன் ஆரம்பித்தது. நாடு கடுமையான பாதுகாப்புகளுக்கு உட்படுத்தப்பட்டு, மக்களிடையே பதட்டத்தை அதிகரித்தது. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை முடிவுறுத்தியமையைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் புத்தளவில் பொதுமக்கள் மீது கிளைமோர் தாக்குதலை ஆரம்பித்து பொதுமக்கள் மீதான தாக்குதல்களை அதிகரித்தமையும் பதட்டத்தை அதிகரிக்க உதவியது.

யசூசி அகாஷி சமாதானம் தொடர்பான விடயங்களைக் கலந்துரையாட நாட்டிற்கான தனது நான்காவது விஜயத்தை மேற்கொண்டிருக்கையில், அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மேற்கொள்ளும் தாக்குதல்கள் எவ்விதம் இலங்கைக்கான வெளிநாட்டு உதவிகளை பாதிக்கும் என்பதை நோக்குவதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. அகாஷி, தெளிவானதொரு அரசியல் தீர்வுத் திட்டத்தை சமர்ப்பிக்கும்படி அரசாங்கத்தை வலியுறுத்தியதுடன் யுத்தத்திற்கு இராணுவத் தீர்வு ஒரு பயனுறுதிமிக்க நீண்டகாலத் தீர்வாக அமையாது என்பதையும் வலியுறுத்தி எச்சரித்தார். இந்த எச்சரிக்கையைப் பின்பற்றி ஏனைய உதவி வழங்கும் நாடுகளும் இதுபோன்ற அறிவிப்புக்களை வெளியிடுமா என்பதும், இது எவ்விதம் வெளிநாட்டு உதவி வழங்கல்களை பாதிக்கும் மற்றும் இதன் மூலம் 2008 ஆம் வருடத்திற்கான திட்டங்களை அமுல்படுத்துவதில் அரசாங்கத்தின் இயல்தன்மை என்பவை பற்றியும் பொறுத்திருந்தே நோக்கப்பட வேண்டியுள்ளது.

இதேவேளை, சர்வ கட்சிப் பிரதிநிதிகள் சபையால் (APRC) தயாரிக்கப்பட்ட யோசனைகள், பங்குபற்றாத அரசியல் கட்சிகளால் கடுமையாக விமர்சிக்கப்பட்டன. யோசனைகள் 13வது திருத்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட பொழுதிலும் அதுவொரு முழுமையான ஆவணமல்ல என்பது அவர்களின் வாதத்திற்குரிய நிலைப்பாடாகும். எதிர்த்தரப்பினர் மற்றும் சிவில் உரிமைக் குழுக்கள் என்பன இடைவிடாது அதிகரித்துச் செல்லும் பணவீக்கம் என்பவற்றுக்கெதிராக தொடர்ந்தும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் செய்வதுடன் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான விலைகளைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கும்படி அரசாங்கத்தினை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன.

### செயற்பாட்டாளர்கள்

அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகள், எதிர்க்கட்சிகள் மற்றும் தொழிற் சங்கங்கள் என்பன பிரதான செயற்பாட்டாளர்களாக உள்ளபோதும் ஐ. நா மற்றும் ஏனைய சர்வதேச அரசசார்பற்ற ஸ்தாபனங்கள் அதேபோன்று ஊடகங்கள் என்பனவும் முக்கியமான பாத்திரங்களை வகிக்கின்றன.

### மாற்றங்கள்

அத்தியாவசரிய உணவுப் பொருட்களின் விலைகள் தொடர்ந்து அதிகரிப்பதும், மக்கள் வாழ்க்கைச் செலவின் தாங்கமுடியாத அதிகரிப்பால் அல்லல்படுவதும் தொடர்கிறது. நாட்டின் பெரும்பான்மையோர் தங்களது நாளாந்த அலுவல்களுக்காக பொதுப் போக்குவரத்துக்களையே பயன்படுத்துவதும், தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுப் போக்குவரத்துக்களை இலக்காகக் கொண்டு தாக்குதல்களை அதிகரித்துள்ளதாலும் மக்கள் அதிகாரித்தளவில் பதட்டத்திற்காளாகி உள்ளனர். வெடிகுண்டுகள் பொருத்திய வாகனங்கள் பற்றிய வதந்திகளும் நாட்டில் பாதுகாப்புக் கரிசனங்களை அதிகரிக்கச் செய்துள்ளது.

### உபாயங்கள் மற்றும் தெரிவுகள்

அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவுக்கெதிரான அதிருப்தியின் விளைவான ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வேலைநிறுத்தங்களைத் தவிர்க்கவும், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்தவும் அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். பாதுகாப்பு முறைகள் அதிகரிக்கப்பட வேண்டியதுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ள நிலையில் பொதுமக்களும் கூடுதல் அவதானத்துடன் இருக்க வேண்டியதன் முக்கியத்துவம் பற்றி அறிவுறுத்தப்படல் வேண்டும். சர்வ கட்சிப் பிரதிநிதிகள் சபையின் அதிகாரப் பகிர்வு தொடர்பான பரிந்துரைகளின் இறுதி அறிக்கை ஒரு முழுமையான முன்மொழிதல் திட்டமாக சமர்ப்பிக்கப்பட்டு திறந்த நிலை விவாதம் மற்றும் கருத்துக்களுக்கு விடப்படல் வேண்டும். ஊடகங்கள் சுதந்திரமாக கருத்தைத் தெரிவிப்பதன் தேவைகள் கவனத்தில் கொள்ளப்படுவதுடன் மேலும் வினைத்திறனான மனித உரிமைகள் கண்காணிப்புப் பொறிமுறை அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

# யாழ்ப்பாணம்

### கள நிலைமைகள்

யாழ்ப்பாணத்தின் முழுமையான பாதுகாப்பு நிலைமைகள் யுத்தநிறுத்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பரவலான ஷெல் வீச்சு, எறிகணை வீச்சு மற்றும் முன்னரங்கக் காவல் நிலைகளிலிருந்தான குண்டு வீச்சுக்கள் மற்றும் அதிகரித்த மோதல்கள் என்பவற்றால் பதட்டத்துடன் காணப்படுகிறது. ஐ.நா பாதுகாப்பு அறிக்கையின் பிரகாரம் மோதல்கள் காரணமாக 29 பொதுமக்கள் கொல்லப்பட்டும் 9 பேர் காயமடைந்தும் உள்ளனர். இந்த எண்ணிக்கை அதற்கு முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் குறைவானதாகக் காணப்பட்டாலும் பதட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது. இலங்கை பலாலி விமானப் படைத்தளம் மீதான தமிழீழ விடுதலைப் புலிகளின் எறிகணை வீச்சு, அவர்கள் ஈழத்திற்கான போராட்டத்திலிருந்து எவ்விதத்திலும் பின்வாங்கவில்லை என்பதை நினைவுபடுத்துகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் எஞ்சியிருக்கும் பிரதேசங்களையும் கைப்பற்றும் அதன் திட்டம் குறித்தான அரசாங்கத்தின் அறிவித்தல்களால் இவ்வருடத்தில் பதற்றம் மற்றும் மோதல் நிலைமைகள் அதிகரிக்கலாமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இதேவேளை, பல வர்த்தகர்கள் கொழும்பிலிருந்து யாழ்பாணத்திற்கு பொருட்களைக் கப்பல்கள் மூலம் கொண்டு செல்லும்போது 20% பொருட்கள் காணாமற் போவதாக முறையிட்டதுடன் இது அவர்கள் பொருட்களின் விலைகளை அதிகரிக்கக் காரணமாகின்றது எனவும் தெரிவித்தனர். மீன்பிடித்தல் போன்று அன்றாடம் உழைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோருக்கு வாழ்க்கைச் செலவுகளின் அதிகரிப்பு தாங்க முடியாததாக உள்ளது.

### செயற்பாட்டாளர்கள்

அரச துருப்பினர், தமிழீழ விடுதலைப் புலிகள், வர்த்தக ஸ்தாபனங்கள், ஐ.நா மற்றும் உள்ளூர் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற ஸ்தாபனங்கள் ஆகியோர் பிரதான செயற்பாட்டாளர்களாக உள்ளனர். யாழ். மாவட்டம் உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு வர்த்தக சங்கம் மற்றும் அரச துருப்பினர் எடுத்த முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியவையாகும்.

### மாற்றங்கள்

அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக, அதன் தலைவரை இலக்கு வைத்தும் மற்றும் வன்னி, முல்லைத்தீவு மாவட்டங்களின் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் எஞ்சியிருக்கும் பகுதிகளையும் கைப்பற்றும் நோக்கோடு, நூற்றுக்கணக்கான பொதுமக்கள் உட்பட இரு தரப்பிலும் பலத்த உயிர்ச் சேதங்களுடனான ஒரு பெரும் தாக்குதலை எந்நேரத்திலும் ஆரம்பிக்கலாமென மக்கள் எதிர்பார்க்கின்றனர். இந்தத் தாக்குதல்கள் மாவட்டத்துக்கான தொடர்ச்சியான உணவுப் பொருட்களின் வழங்கலைப் பாதிக்கலாம் எனவும் மக்கள் அச்சப்படுகின்றனர். அம்பாறை மற்றும் மட்டக்களப்பு போன்ற சில மாவட்டங்களில் தற்போது அரிசிக்கு பற்றாக்குறை நிலவுகிறது. மூன்று மாதங்களுக்கு மாவட்டத்திற்கு போதுமான உணவுப் பொருட்கள் கையிருப்பில் உண்டு என யாழ்ப்பாண பிரதேசச் செயலாளரால் விடப்பட்ட அறிக்கை மக்களுக்குப் பெரும் ஆறுதலை அளித்துள்ளது. மாவட்டத்திற்கான தொடர்ச்சியான உணவு விநியோகத்தை உறுதி செய்வதற்கு அரசாங்கமும் ஒரு விசேட குழுவை உருவாக்கியுள்ளது.

### உபாயங்கள் மற்றும் தெரிவுகள்

மாவட்டத்தின் மக்கள் தங்கள் நாளாந்த அலுவல்களைக் கவனிப்பதற்காக

வெளியில் சென்று வருவதற்கான சுமூகமான சூழ்நிலைகளை பேணுவதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுத்தல் வேண்டும். தங்கள் வாழ்க்கைக்கு தேவையான வருமானத்தைத் தேடுவதில் அல்லல்படும் மக்களுக்கான வருமானம் ஈட்டும் செயல் நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். மீன் பிடித்தலிற்கு விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு தொடர்பாடல் வசதிகள் ஸ்திரப்படுத்தப்பட்டு, மேம்படுத்துவதற்கு முன்னெச்சரிக்கையுடனான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

## மன்னார்

### கள நிலைமைகள்

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்ததுடன் மன்னாரில் அண்மைக்கால நடவடிக்கைகளுக்காக பெரும் எண்ணிக்கையிலான கமாண்டோப் படையினரை ஈடுபடுத்தியுள்ளமையானது தொடரும் மோதல் நிலைமைகளுக்கு இராணுவத் தீர்வை நாடுவதிலான அரசாங்கத்தின் தீர்மானத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.

பெரியமடு மற்றும் தட்சணாமருதமடு பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள், தாங்கள் கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாழ்வதால் தங்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் உதவிகள் போதுமானளவு கிடைப்பதில்லையென முறையிட்டனர். மன்னார் ஆயர் இந்த மக்களுக்கான உதவிகள் அதிகரிக்கப்பட வேண்டுமென வேண்டுகோள்கள் பல விடுத்திருந்த போதிலும் இவ் வேண்டுகோள்களை விட மோதல்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படும் நிலை காணப்படுகிறது.

வாகனங்கள் மீதான அதிகரித்த பாதுகாப்புச் சோதனைகளினால் தொடர்ச்சியாகப் பொருட்களை ஏற்றி, இறக்குவதற்கான வேலையாட்களின் கூலி அதிகரிப்பால் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளது.

### செயற்பாட்டாளர்கள்

அரச படையினர், தமிழீழ விடுதலைப் புலிகள், மனிதநேய முகவர் நிறுவனங்கள், மன்னார் ஆயர் மற்றும் பொலிசார் ஆகியோர் பிரதான செயற்பாட்டாளர்களாக கருதப்படுவர்.

### மாற்றங்கள்

புதிய வருடத்தின் பிறப்பு மன்னார் மக்களுக்க சமாதானத்திற்கான நம்பிக்கைகளைக் கொண்டு வரவில்லை. வாண வேடிக்கைகளுக்குப் பதிலாக ஷெல் வீச்சுக்கள் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களையே அன்று கேட்கக் கூடியதாக இருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கடிக்கும் வரை இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தப் போவதில்லை எனும் அரசாங்கத்தின் அறிவித்தல் காரணமாக மோதல்கள் பெருமளவில் அதிகாரிக்கலாமென மக்கள் எதிர்பார்க்கின்றனர். உதவி நிறுவனங்கள் தங்கள் நடவடிக்கைகளை குறைத்து அல்லது முற்றிலுமாக நிறுத்தி வருவதினால், உதவி வழங்கல்களில் தங்கியுள்ள உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரிடையே அதிகரித்தளவிலான பதட்டம் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன. அவர்களது பாதுகாப்பு, போக்குவரத்துக் கட்டுப்பாடுகளில் தொடர்ச்சியானதும் எதிர்வு கூறமுடியாத மாற்றங்கள் என்பனவும் மக்களின் நாளாந்த வாழ்க்கையை சீர்குலைப்பதாக உள்ளமையும் மேலும் கவலையளிக்கிறது. பிரயாணிகள் பஸ் சேவை மாலை 5 மணி வரை தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை மக்களின் பெரும்பாலோனோருக்கு விலைகள் தொடர்ந்தும் அதிகரித்துச் செல்ல மாவட்டத்தின் பாரம்பரிய வருமானம் ஈட்டும் வழிமுறைகளான மீன்பிடி மற்றும் விவசாயம் என்பவற்றுக்கான கட்டுப்பாடுகள் காரணமாக வருமானம் தொடர்ந்தும் வீழ்ச்சியடைவதினால் வாழ்க்கைச் செலவென்பது ஒரு பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது.

### உபாயங்கள் மற்றும் தெரிவுகள்

எதிர்காலத்தில் சாத்தியமாகக் கூடிய அவசர மனிதாபிமான நிலைமைகளைக் கையாள்வதற்குத் தயாராக இருக்கும் வகையில் பின்னிகழ்வுக்கான திட்டங்களை உருவாக்கி உள்ளூர் மட்டத்தில் அவற்றை வினைத்திறனுடன் அமுல்படுத்துவதற்கு மனிதாபிமான முகவர் ஸ்தாபனங்களுக்கான ஒரு தேவையும் உள்ளது. பாதுகாப்புப் படைகளும் கூட, பிரதேச மக்கள் சுமுகமான நாளாந்த வாழ்க்கை நிலைமைக்குத் திரும்புவதை உறுதி செய்ய தேவையான உடனடி நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

பாதுகாப்பு நிலைமைகளைப் பொறுத்தவரையில், அரசாங்கம் பொதுமக்களுக்கான பாதுகாப்பை வழங்கும் தேவையினை உறுதிப்படுத்துதல் வேண்டும். பிரதேசத்தில் அரசசார்பற்ற ஸ்தாபனங்களின் செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் அவர்களது நடவடிக்கைகளை மேற்கொண்டு நடாத்துவதற்கு இடையூறுகள் விளைவிக்காமல் அரசாங்கம் அதன் ஒத்துழைப்பை வழங்குதல் வேண்டும். அண்மைக் காலங்களில் கணிசமானளவு அதிகரித்துக் காணப்படும் அபாய நிலைமைகளின் கீழ் மேற்கொள்ளும் பணிகளுக்காக அரசசார்பற்ற ஸ்தாபனங்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட வேண்டிய தேவையுள்ளது.

## திருகோணமலை

### கள நிலைமைகள்

மேலதிக விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸ் பிரிவினரின் ஈடுபடுத்தல் மற்றும் அதிகரித்தளவிலான சுற்றிவளைப்பு, திடீர் சோதனைச் சாவடிகள் என்பவற்றால் திருகோணமலை நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. கொலைகள் மற்றும் கடத்தல்கள் என்பன ஒப்பீட்டளவில் குறைந்துள்ள போதிலும் நிலைமைகள் பதட்டமாகவே காணப்படுகின்றன. எவ்வாறாயினும் தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் அரசாங்கப் படைகளுக்கிடையிலான மோதல்கள் உயிரிழப்புக்களை ஏற்படுத்துகின்றன. உள்ளூர் அரசசார்பற்ற ஸ்தாபன ஊழியரொருவர் உட்பட பல தமிழ் இளைஞர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளில் ஈடுபட்டார்களென்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஐ.நா வாகனங்கள் உட்பட அனைத்து வாகனங்களும் சோதனைச் சாவடிகளில் தொடர்ந்தும் சோதனையிடப்பட்டுப் பதியப்படுகின்றன.

அண்மைக்கால கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தினால் மக்கள் இடம்பெயர்ந்ததுடன் பயிர்ச் செய்கை போன்ற அவர்களது வாழ்வாதார முயற்சிகள் பாதிக்கப்பட்டு, அடுத்த அறுவடைக் காலம் வரை அம்மக்கள் வெளி உதவிகளில் தங்கியிருக்கும் தன்மையை அதிகரித்துள்ளது. வட்டமடு மற்றும் செம்பிமோட்டை போன்ற சில பகுதிகளில் மீள்திரும்பிய உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் தங்களது நிலங்களில் பயிர்ச்செய்கைகளை மீள ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் அனுமதி மறுத்துள்ளது. மீன் பிடித்தலில் தற்பொழுதுள்ள தடையும் மீனவ சமூகத்திற்குப் பெரும் சிரமங்களை உருவாக்குவதுடன் இதற்கு ஒரு தீர்வும் காணப்படாவிட்டால் முடிவில் இது பிரச்சினைகளுக்கு இட்டுச் செல்லலாம்.

நிதிப்பற்றாக்குறை மற்றும் அரசாங்கத்தின் அசமந்தப் போக்குகள் பிரதேசத்தின் உதவி முகவர் நிறுவனங்களின் வினைத்திறன்களையும் பாதிப்பதால் உள்ளக இடம்பெயர்ந்த மக்களினது நிலைமைகள் தொடர்ந்தும் மாற்றமடையாமலேயே உள்ளன. உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் அடிப்படைச் சுகாதார வசதிகளின்றி

தற்காலிக கொட்டகைகளில் தொடர்ந்தும் அல்லலுற்று வருகின்றனர்.

திடீர் பாதுகாப்பு சோதனைகள் மக்கள் தங்கள் அலுவலகங்களுக்குச் செல்வதிலும், பாடசாலைப் பிள்ளைகள் நேரத்திற்கு பாடசாலைகளுக்குச் செல்வதிலும் காலதாமதங்களை ஏற்படுத்துகின்றன என்பதுடன் இதனால் நாளாந்தம் வேலை செய்து சம்பாதிப்போரும் கடுமையாகப் பாதிக்கப் படுகின்றனர். போக்குவரத்து நிலைமைகளும் மக்களின் அதிருப்திக்குரிய ஒரு அம்சமாக உள்ளது. பஸ்வண்டிகள் மீதான தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல்களால் அநேகமான மக்கள் இரயில் வண்டி மூலம் பயணங்களை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர். தாமதங்கள், அளவுக்கு மிஞ்சிய பிரயாணிகள், போதிய காற்றோட்ட வசதியின்மை மற்றும் அசுத்தமான இரயில் பெட்டிகள் போன்ற அனைத்தும் பயணிகளின் துயர்களை மேலும் அதிகரிக்கச் செய்கின்றன.

திருகோணமலையில் குடும்பங்களுக்கு 'குடும்ப அட்டை' வழங்கப்படுவதைத் தொடர்ந்து வீட்டிற்கு வரும் விருந்தாளிகள் எவராயினும் திருகோணமலையில் எந்தக் குடும்பத்தாரோடும் தங்க வேண்டுமானால் கிராமசேவகரிடம் முன் அனுமதி பெற வேண்டியுள்ளது.

மோதல்களினால் சேதமடைந்த சில பாடசாலைகள் மீளவும் இயங்க ஆரம்பித்துள்ளமையால், காணாமல் போன அல்லது சேதமாக்கப்பட்ட பாடசாலைகளுக்கான வழங்கல்கள் மீளளிக்கப்பட வேண்டியுள்ளது. எவ்வாறாயினும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தரப்பிலான தாமதங்கள் இப்பாடசாலைச் சிறுவர்களுக்கு பாடசாலைக் கல்வி இல்லாமல் இருப்பதையே காட்டுகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் ஐ. நாவின் பணிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளாக சம்பூர், மாவிலாறு மற்றும் புல்மோட்டை என்பன தொடர்ந்தும் காணப்படுகின்றன. புல்மோட்டை, பாலாவி, சிறிபுர பகுதிகளில் புதிய செயல் திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் ஐ. நா பணியாளர்கள் ASC/LSA என்போரைத் தொடர்பு கொண்டு இராணுவத்துடனான ஒருங்கிணைப்புகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்தி, எந்தப் பகுதிகளுக்கு போகமுடியுமென்பதை தீர்மானித்தல் வேண்டும். மூதூர் மற்றும் கிளிவெட்டி/ஈச்சிலம்பற்று பகுதிகளுக்கான பணிகளின் பணியாளர்கள் காலை 7.30 மணிக்கு முன்னர் திருகோணமலையை விட்டுப் புறப்பட முடியாதுடன் மாலை 6.30 மணிக்கு முன்னர் அவர்கள் மீண்டும் திருகோணமலைக்குத் திரும்புதல் வேண்டும்.

### செயற்பாட்டாளர்கள்

இராணுவம், கடற்படை, விசேட அதிரடிப் படை, அறியப்படாத ஆயுதக் குழு மற்றும் பிள்ளையான் குழு ஆகியோர் பிரதான செயற்பாட்டாளர்களாவர். ஊடகங்கள், அரசசார்பற்ற ஸ்தாபனங்கள் மற்றும் ஐ. நா முகவர்கள் ஆகியோரும் ஏனைய செயற்பாட்டாளர்களாவர்.

### மாற்றங்கள்

யுத்தநிறுத்த ஒப்பந்தம் இரத்தானமை மற்றும் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு விலகியமை என்பன பொதுமக்கள் மற்றும் அரசசார்பற்ற ஸ்தாபன ஊழியர்களிடையே ஓரளவு பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்ட போதிலும் உதவிப் பணியாளர்கள் முன்னைய வருடங்களை விட எதிர்காலத்தில் நிலைமைகள் மோசமடையலாம் என கவலை கொள்கின்றனர்.

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் திருகோணமலை மாவட்டத்தில் தங்கள் பணிகளை முடிவுறுத்தி அலுவலகம் இயங்கி வந்த சுங்கத் திணைக்களத்தின் கட்டிடத்தை சுங்கத் திணைக்களத்திடம் கையளிக்கவுள்ளனர்.

திருகோணமலை நகரிற்கான அனைத்து நுழைவாயில்களிலும் கடுமையான சோதனைகள் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் என்பன நடைமுறையில் இடப்பட்டுள்ளன. மேலதிக துருப்புக்கள் வீதிகளில் காணப்படுவதுடன் அனைத்து வாகனங்களும் கடுமையான பாதுகாப்பு சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

### உபாயங்கள் மற்றும் தெரிவுகள்

போரின் கொடூரங்களின் பின் கல்வித்துறை வழமையான நிலைக்கு மெல்லத் திரும்பிக் கொண்டிருப்பதால் மாவட்டத்தில் கல்வித்துறையில் பிரதானமாக மீள்புதுப்பித்தல் வடிவிலான அடிப்படை அபிவிருத்திகளுக்க அவசர தேவைகள் உள்ளன. சம்பந்தப்பட்ட அரச அதிகாரத்தில் உள்ளவர்களால் ஆசிரியர்களை வழங்குதல், கல்வி உபகரணங்கள், பாடசாலைச் சீருடைகள் மற்றும் பாடசாலையை அடைவதற்கு நீண்ட தூரத்திலிருந்து வரும் மாணவர்களுக்க காலணிகள் போன்றவற்றை வழங்குவதில் போதுமான சிரத்தை எடுக்காமை போன்ற காரணங்களினால் மக்கள் கல்வி முறைகள் மீதான நம்பிக்கைகளை இழப்பதினால் பாடசாலைகளை விட்டு இடைநடுவே விலகிச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை கூடுதலாக உள்ளது.

புதிய உபாயங்கள் இனம் காணப்பட்டு, மாவட்டத்தில் வாழும் குடும்பங்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படுவதுடன் போரின் விளைவால் அழிவுற்ற அவர்களது வாழ்க்கைத் தரங்களும் மேம்படுத்தப்படல் வேண்டும். நிலவுகின்ற வறுமையின் விளைவாக சிறுவர் உழைப்பு மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் என்பன அதிகரித்த நிலையில் காணப்படுவதுடன் சிறுவர்களுக்கு அதிகளவில் உளச் சமூகவியல் ஆதரவும் தேவையாக உள்ளது.

## வவுனியா

### கள நிலைமைகள்

போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து அரசாங்கம் விலகிக் கொண்டமையைத் தொடர்ந்து இலங்கை அரச படைகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான அதிகரித்த மோதல் நிலைமைகளால் வவுனியாவில் பாதுகாப்பு நிலைமைகள், விசேடமாக பாதுகாப்பு முன்னரங்க நிலைகளை அண்மித்த பகுதிகள் ஸ்திரமற்றுக் காணப்படுகின்றன.

இம் மாதம் மோதல்கள், இராணுவத் துணைக் குழுக்களுக்கிடையிலான சச்சரவுகள் மற்றும் கண்ணிவெடித் தாக்குதல்கள் போன்ற சம்பவங்கள் நிறைந்தவையாகக் காணப்பட்டது. ஐ. நா வாகனங்கள், ஊழியர்கள் அவர்களது பொதிகள் என்பவை மீது வவுனியா தெற்கு ஓமந்தைச் சோதனைச் சாவடியில் கடும் சோதனைகள் தொடர்ந்தும் காணப்பட்டன. திடீர் பாதை மறிப்புகள் மற்றும் சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கைகள் என்பன இராணுவம், பொலிஸ் ஆகியோரால் ஒன்றிணைந்து மேலதிக இராணுவத்தையும் ஈடுபடுத்தி நடாத்தப்பட்டன. A9 மற்றும் A14 வீதிகளில் பதட்டம் அதிகரித்துக் காணப்பட்டன.

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் விலகல், தொடரும் கொலைகள், கடத்தல்கள் மற்றும் மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து அதிகரித்தளவிலான இடம்பெயர்ந்த மக்களின் வருகை என்பனவும் வவுனியா மாவட்டத்தில் நிலவும் பதட்டமான சூழ்நிலைகளுக்கு காரணமாகவுள்ளன.

உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களிலிருந்து சோதனைச் சாவடிகள் அகற்றப் பட்டமையினால் முகாம்களிலுள்ள மக்கள் ஆயுதக் குழுக்கள் முகாம்களினுள் நுழைந்து குழப்பத்தை உருவாக்கலாம் என அஞ்சுகின்றனர்.

### செயற்பாட்டாளர்கள்

அரசாங்க அதிகாரிகள், இராணுவம், பொலிஸ், தமிழீழ விடுதலைப் புலிகள், ஐ. நா முகவர்கள், ஐ.சி.ஆர்.சி, அரசசார்பற்ற ஸ்தாபனங்கள், இராணுவத் துணைப்படைகள் ஆகியோர் மாவட்டத்தின் பிரதான செயற்பாட்டாளர்கள்.

### மாற்றங்கள்

தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் அரச படைகளுக்கிடையிலான மோதல்கள் அதிகரித்ததைத் தொடர்ந்து உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் தொகையும் அதிகரித்தது. ஐ.நா மற்றும் மனிதநேய முகவர்களுக்கு இம்மக்களுக்கு கூடுதல் உதவிகள் வழங்குவதற்கான வாய்ப்புகள் உண்டு. எவ்வாறாயினும் ஸ்திரமற்ற பாதுகாப்பு நிலைமைகளால் உள்ளக இடம்பெயர்ந்த மக்களது மீள்குடியிருப்பு திட்டங்களில் தாமதங்கள்

மற்றும் சில கட்டுப்பாடுகளும் இருக்க வாய்ப்பு உள்ளது. சில உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் இந்தியாவிற்குச் செல்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ளதாக வெறும் சந்தேகத்தின் பேரில் மட்டும் பலர் கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் உள்ளனர்.

நகரில் நிலைமைகள் ஒப்பீட்டளவில் அமைதியானதாக வர்த்தக நடவடிக்கைகள் ஒழுங்காக நடைபெறுவதுடன், கடைகள் இரவு 7 மணிவரை திறந்திருக்கவும் காணப்படுகிறது.

**உபாயங்கள் மற்றும் தெரிவுகள்**

தொடரும் மோதல்களால் உருவாகும் அதிகரித்த உள்ளக இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவதற்கான அவசர திட்டங்களை மாவட்டத்தில் அபிவிருத்தி மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள முகவர்கள் உருவாக்கல் வேண்டும். இதன் பின்னணியில் அரசாங்கம் அரசசார்பற்ற ஸ்தாபனங்களிற்கு விதித்துள்ள கட்டுப்பாடுகளை தளர்த்தல் வேண்டும். இது இந்த முகவர்கள் தங்கள் பணிகளை கூடுதல் வினைத்திறனுடனும் பயனுறுதிமிக்க வகையிலும் முன்னெடுத்துச் செல்ல ஏதுவாக இருக்கும்.

கொள்ளைகள் மற்றும் கொலைகள் உட்பட மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பான கூட்டங்களிலிருந்து உள்ளக இடம்பெயர்ந்த மக்களைப் பாதுகாப்பதற்கு முகாம்களினுள் பாதுகாப்பு முறையொன்றை ஏற்படுத்துவதற்கான தேவையொன்றுள்ளது. மனித உரிமை முகவர்களும் இந்த விடயத்தில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

எங்களது இணையத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள

http://www.humanitarian-srilanka.org/Knowledge_Centre/Publications.php

……..

**சூழ்நிலையின் துரித மதிப்பிடல் (RCA)** உள்ளூர் சூழ்நிலைகளின் மாற்றங்களை நன்கு புரிந்து கொள்வதன் அடிப்படையில் பல்வேறுபட்ட மனிதநேய மற்றும் அபிவிருத்தித் தேவைகள் குறித்து கவனம் செலுத்தும் அதிக பயனுறுதி கொண்ட இடையீடுகளைத் திட்டமிட்டு, அமுல்படுத்துவதற்கான பயனுள்ள தகவல்களை மனிதநேய மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனங்களுக்கு வழங்குவதை நோக்காகக் கொண்டுள்ளது.

அதே வேளை, சூழ்நிலைகளின் துரித மதிப்பிடல் இடையீடகள் மாவட்டங்களின் சமாதானம் மற்றும் மோதல்நிலை மாற்றங்களுக்கு கூருணர்வுத்தன்மை கொண்டவை என்பதையும் முகவர்கள் மோதல்களை சிறிதளவேனும் உருவாக்கவோ அல்லது மோசமாக்குவதையோ தவிர்த்து மோதல் தணிப்பு/மோதல் உருமாற்றம் அல்லது சமாதானத்தைக் கட்டியெழுப்புதலில் கூடுதல் ஈடுபாட்டைக் காண்பிப்பதற்கான சாத்தியங்களை அதிகரிப்பதையும் நோக்காகக் கொண்டுள்ளது.

சூழ்நிலைகளின் அபாயவாய்ப்புக்களை மதிப்பிடல் முகவர்களின் செயற்பாடுகளை சற்று இடைநிறுத்தி ஊழியர்கள் மற்றும் திட்டம் அமுல்படுத்தும் இடங்களிலுள்ள மக்களின் பாதுகாப்பை அதிகரிப்பதை நோக்காகக் கொண்டுள்ளது.

வெளியேயுள்ள மட்டத்தில் (பொது மக்கள், சர்வதேச சமுகம்) ஆலோசனைத் தேவைகளுக்காக இலங்கையின் மாவட்டங்களின் நிலைமைகள் பற்றிய விரிவானதும், நடுநிலையானதுமான தகவல்களை சூழ்நிலைகளின் துரித மதிப்பிடல் வழங்கும்.

இந்த அறிக்கை மீதான உங்களது ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை வரவேற்கிறோம், அவற்றை பின்வரும் மின்னஞ்சல்/தபால் முகவரிக்கு தயவுசெய்து அனுப்பி வைக்கவும்: **peacepa1@cha.lk**

மனிதநேய அமைப்புக்களுக்கான கூட்டமைப்பு

30/81, லோங்கடன் பிளேஸ்,

கொழும்பு 7,

இலங்கை.

தொலைபேசி/தொலைநகல் : 94-112506855/2598413